2004 ஜூலை 28]

51—

எத்தனால் தயாரித்தல்

***5274–திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வெல்லப்பாகிலிருந்து எத்தனால் என்கிற இரசாயன திரவத்தைத் தயாரிக்க சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன். மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

அரசு சர்க்கரை ஆலைகளில் எத்தனால் தயாரிக்கும் திட்டம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா.ப. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகில் உள்ள அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை மற்றும் சேலத்தில் உள்ள மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலை வடிப்பகத்தில் எத்தனால் என்கின்ற இரசாயன திரவத்தைத் தயாரிக்க அனுமதி வழங்கினால் நலிவடைந்த நிலையில் உள்ள அந்த ஆலைகள் இலாபத்தில் இயங்குவதற்கு வழிவகுக்கும். மேலும், விவசாயிகளுக்கு நல்ல பயன் கிடைக்கும் வகையிலும் இருக்கும். ஆகவே, நமது இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு இதைக் கருத்தில் கொண்டு, தனியார் சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்கியதைப்போல அமராவதி மற்றும் மோகனூர் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி வழங்க முன்வருமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அமைச்சர் அவர்களிடம் நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சர்க்கரை ஆலைகள் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால், அரசு இதுபோன்ற காரியங்களை இனிமேல் தொடர்ந்து செய்ய முடியாத சூழ்நிலையில் இருப்பதால்—அந்தத் தனியார் துறைகளில்* Thiru Aruran Sugars, Shakthi Sugars, Rajshree Sugars, Tharani Sugars *போன்ற ஆலைகளில் ஏற்கெனவே அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால்—அரசு ஆலைகளுக்கு அந்த*

அனுமதியை வழங்க இயலாத நிலையில் இப்போது அரசு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே சேலம் மோகனூர் சர்க்கரை ஆலை, அமராவதி கூட்டுறவுச் சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகளின் வடிப்பாலைகளில் எத்தனால் தயாரிக்கும் அனுமதியை வழங்கினால் அந்த ஆலைகள் நலிவிலிருந்து நீங்குவதுடன், ஆலையைச் சார்ந்த விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் கரும்புக்குக் கூடுதல் விலை கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது. மேலும், தற்போது தமிழ்நாட்டில் 5 தனியார் ஆலைகளுக்கு எத்தனால் தயாரிக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல் இதன்மூலம் 200 இலட்சம் லிட்டர் எத்தனால் தயாரிக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் 8 மாவட்டங்களுக்கு இந்த அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டிற்கு மொத்தம் தேவைப்படுவது 500 இலட்சம் லிட்டர், அந்த 5 சதவீதம் என்ற அடிப்படையிலே. சேலம், அமராவதி ஆகிய இரண்டு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி கொடுத்தால், மேலும் 100 இலட்சம் லிட்டர் எத்தனால் கொடுக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. இந்த இரண்டு ஆலைகளில் எத்தனால் தயாரிக்க, ஒரு ஆலைக்குக் குறைந்தது 4.25 கோடி ரூபாய் நிதி தேவைப்படுகிறது. தற்போது இரண்டு ஆலைகளும் திரண்ட நஷ்டத்தில் உள்ளன மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதுபோல். இருந்தாலும், கூட்டுறவுத் துறை என்ற அடிப்படையிலே, ஒரு முன்னுரிமை கொடுக்கக்கூடிய அடிப்படையிலே, bank அல்லது இதர நிறுவனங்கள் தற்போது கடன் கொடுக்கத் தயாராக இல்லாத சூழ்நிலை இருந்தாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து, நீண்டகாலக் கடன் அல்லது மானியம் கொடுத்தால் அல்லது வட்டியில்லாக் கடன் தந்தால் இந்த ஆலைகள் இரண்டும், 2, 3 ஆண்டுகளில் மூலதனத்தை எடுத்துவிடக்கூடிய வாய்ப்பு இருக்கும் என்பதை அன்போடு கூறிக்கொள்ளக்கூடிய வகையிலே, நம்முடைய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இரண்டுக்கு—ஒரு ஆண்டுக்கு 50,000 டன் மொலாசஸ்

இருந்தால் 100 இலட்சம் லிட்டர் எத்தனால் எடுக்கலாம். அமராவதி மட்டும் 10,000...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சண்முகவேலு, கேள்வியாகப் போடுங்கள். நீங்களே பதிலையும் சொல்லிவிட்டால் அப்புறம் அமைச்சர் என்ன செய்வார்?

திரு. சி. சண்முகவேலு: தற்போது இரண்டு ஆலைகளுக்கும், 4 கூட்டுறவு ஆலைகளின் மொலாசஸ் இருந்தால் போதுமானதாக இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆட்சியில் மொலாசஸ் மூலம் எத்தனால் தயாரிக்க அனுமதி வழங்க நம்முடைய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 5 தனியார் சர்க்கரை ஆலைகளிலிருந்து 8 மாவட்டங்களுக்குக் கிட்டத்தட்ட 250 இலட்சம் லிட்டர் எத்தனால் என்று சொன்னார்கள். அது தவறு. 500 இலட்சம் லிட்டர் எத்தனால் ஏற்கெனவே தயாரிக்கப்படுகிறது. இந்த 500 இலட்சம் லிட்டர் எத்தனால் இந்த 8 மாவட்டங்களுக்கும் போதுமானதாக இருக்கிறது. இப்போது பணப் பிரச்சினையின் காரணமாகத்தான் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் எத்தனால் தயாரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு இதில் கொள்கை அளவில்தான் முடிவு எடுக்கவேண்டுமே தவிர இதில் உடனடியாக முடிவு எதுவும் சொல்லமுடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். ராஜா.

திரு. எச். ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எத்தனால் தயாரிப்பதன் மூலம் அரசாங்கமானது சர்க்கரை ஆலைகள் மூலமாக அதிக வருவாயை ஈட்ட முடியும். அப்படியிருக்கின்ற சூழ்நிலையில் நட்டத்திலே இயங்குகின்ற சர்க்கரை ஆலைகளை இலாபத்திலே இயங்கச் செய்வதற்கான ஒரு வாய்ப்பு வரும்போது அரசாங்கத்திற்குத் தடையாக இருக்கின்ற அந்த அம்சம் என்ன என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குத் தடையாக இருப்பது பணம்தான். நிதி இருந்தால்தான் நாம் எதையும் செய்யமுடியும். எத்தனால் தயாரிப்பதற்கு முதலிலே நாம் investment பண்ண வேண்டும். அதிகப்படியாக இருப்பதனால் அதைச் செய்யமுடியாத சூழ்நிலை இருக்கிறது. அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெக. வீரபாண்டியன்.

திரு. ஜெக. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலேயே கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலே மயிலாடுதுறை என்.பி.கே.ஆர். கூட்டுறவு சர்க்கரை ஆலைதான் அதிக இலாபத்திலே ஓடிக்கொண்டிருந்தது. அரசு அதை விரிவாக்கம் செய்யவேண்டும் என்பதற்காகவும், அரவைத் திறனை அதிகரிக்க வேண்டும் என்ற காரணத்தினாலும் அதைத் தனியாரிடம் கொடுத்ததன் விளைவாக அந்த ஆலை நஷ்டத்தில் இயங்கி, தற்போது பணப் பட்டுவாடா செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. எத்தனால் தயாரிப்பதன் மூலமாகத்தான் டன் ஒன்றுக்கு கரும்புக்கு 1,000 ரூபாய் தரமுடியும் என்று வேளாண் விஞ்ஞானிகள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையிலே மயிலாடுதுறை sugar factory பக்கத்திலேயே தனியார் ஆலைகள் வந்துவிட்ட காரணத்தினால் தற்போது விவசாயிகள் மிகுந்த சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அரசு எத்தனால் தயாரிக்க அனுமதிக்க வேண்டும். இல்லையேல், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 150 ரூபாய் போனஸ், முன்பு கொடுத்ததைப் போல் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—55

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 52, திரு. கே.சி. கருணாகரன், மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.